# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 115 | வியாழக்கிழமை Thursday | 23.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# டெல்லியில் எதிர்க்கட்சிகளின் போராட்டத்துக்கு தவெக ஆதரவு





## முதலமைச்சர் விஜய் அறிவிப்பு

சென்னை: "ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டது ஜனநாயகத்துக்கு எதிரானது. நம் மக்களின் உணர்வுகளையும் மாணவர்களின் உணர்வுகளையும் ஒன்றிய அரசு மதித்தே ஆக வேண்டும். அதன் வெளிப்பாடாக,நீட்தேர்வு அறவே அகற்றப்பட வேண்டும்என முதல்வர் விஜய்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "நீட் தேர்வு குளறுபடிகளை எதிர்த்து டெல்லியில் நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்துக்கு ஆதரவாகக் களமிறங்கிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டது, ஜனநாயகத்துக்கு எதிரானது. ஒன்றிய அரசின் இந்தச் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கவை.

விரும்பத்தகாத சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சிகள் சார்பில் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெறும் போராட்டத்துக்குதமிழக வெற்றிக் கழகம் தனது முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது.

நீட்தேர்வைப்பொறுத்தவரை நீட் தேர்வு முறை அறவே அகற்றப்பட வேண்டும் என்பதே தவெகவின் சமரசமற்ற நிலைப்பாடு. மாணவர்களை மட்டுமல்லாது அவர்களது குடும்பங்களையும் வெகுவாகப் பாதிக்கும் நீட் தேர்வு முறையை வைத்து வாக்கு அரசியல் செய்வதற்காக, பொய்யான வாக்குறுதிகளை நாம் ஒருபோதும் அளிக்கமாட்டோம். நீட் தேர்வு போன்றவை ஒழிக்கப்பட வேண்டுமெனில், முதலில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். அது மட்டுமே ஒரே நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும். ஒருவேளை, அதில் ஏதேனும் சட்ட நடைமுறைச் சிக்கல்கள் இருக்குமெனில், அவற்றை நிவர்த்தி செய்யும் வரை, இடைக்காலத் தீர்வாக, Special Concurrent list உருவாக்கி, அதன் மூலம் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். வாயிலாகக் கல்வி மற்றும் மருத்துவக் கல்வி உள்ளிட்ட விஷயங்களில் மாநிலங்களுக்கு முழு அதிகாரம் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். இதுதான் நிரந்தரத் தீர்வு மற்றும் இடைக்காலத் தீர்வு நோக்கிய நம்முடைய பார்வை. இதை, கட்சி தொடங்கியபோதே, தவெக சார்பாக நடைபெற்ற கல்வி விருது வழங்கும் விழாவிலேயே ஆழமாக வலியுறுத்தி இருக்கிறோம். நம் மக்களின் உணர்வுகளையும் மாணவர்களின் உணர்வுகளையும் ஒன்றிய அரசு மதித்தே ஆக வேண்டும். அதன் வெளிப்பாடாக,நீட்தேர்வுஅறவே அகற்றப்பட வேண்டும். இந்தச் சிக்கலுக்கு இது மட்டுமேஒரேதீர்வு என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுடன் காவிரி விவசாய சங்க தலைவர்கள் சந்திப்பு



தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினை தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கதலைவர் ஈரோடு பி.கே. தெய்வசிகாமணி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு காவிரி விசாயிகள் தலைவர் எல்.பழனியப்பன்,கௌரவ தலைவர் எஸ்.ராமதாஸ், பொதுச்செயலாளர் என்.செந்தில்குமார் மற்றும் மாநில நிர்வாகிகள் சந்தித்தனர்.

தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்,தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் ஈரோடு பி.கே.தெய்வசிகாமணி தலைமையில் தமிழ்நாடு காவிரி விவாசாயிகள் தலைவர் எல்.பழனியப்பன், கௌரவ தலைவர் எஸ். ராமதாஸ், பொதுச்செயலாளர் என்.செந்தில்குமார் மற்றும் மாநில நிர்வாகிகள் சந்தித்தனர். அப்போது துணை பொதுச்செயலாளர் க.பொன்முடி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எம். ஆர். .பன்னீர்செல்வம், எம்.எல்.ஏ., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி,செய்தித்தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை இலங்கை முன்னாள் எம்.பி. சுமந்திரன் சந்தித்துள்ளார். மரியாதை நிமித்தமாக இந்த சந்திப்பு நடைபெற்றதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளாவது;- திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலினை (22.7.2026) அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், இலங்கை நாடாளுமன்றமுன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி மூத்த தலைவருமான எம்.ஏ.சுமந்திரன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லியில் தீவிரம் அடையும் போராட்டம்: கூடுதல் படைகள் வரவழைப்பால் பதற்றம்




'நீட்' வினாத்தாள் கசிவு விவகாரம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாகவும், 'நீட்' தேர்வு தோல்வி காரணமாக மாணவர்கள் தற்கொலைசெய்ததுபோன்றவற்றுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் டெல்லி ஜந்தர் மந்தரில் கடந்த மாதம் 20-ந்தேதி முதல் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்த போராட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்ட சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கும் நாளில் நாடாளுமன்றம் நோக்கி பேரணி செல்வதாக அறிவித்தார். இதனையடுத்து சில நாட்களில் அவர் மருத்துவ சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இருந்தாலும் அதே நாளில் கரப்பான் பூச்சி ஜனதாகட்சியினர் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடத்தினர். இந்த பேரணியில் நாடு முழுவதும் இருந்து பல ஆயிரக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்றனர். இவர்களை தடுக்க பல இடங்களில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டன. ஆனாலும் கூட்டம் கட்டுப்படுத்த முடியாதபடி இருந்ததால் தடியடியும், கண்ணீர் புகைக்குண்டுகளும் வீசப்பட்டன. பதிலுக்கு போலீசார் மீது கல்வீச்சும் நடந்ததாக கூறப்படுகிறது.போலீசார் நடத்திய தடியடியில் பல இளைஞர்கள் காயம் அடைந்தனர். அவர்கள் நாடாளுமன்றம் அருகே உள்ள ஆர்.எம்.எல். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மாணவர்களும், இளைஞர்களும் தாக்கப்பட்ட இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அனைத்து எதிர்க்கட்சிகளும் இதனை பெரிதாக எடுத்தன.காங்கிரஸ் கட்சியும் மாணவர்களுக்கு ஆதரவாக போராட்டத்தை தொடங்கியுள்ளது. நாடு முழுவதிலும் இருந்து டெல்லியில் இளைஞர்கள் குவிவதால், டெல்லியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில்,டெல்லியில் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய அரசு கூடுதலாக 20 மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎப்) கம்பெனிகளை பணியில் ஈடுபடுத்த உத்தரவிட்டுள்ளது. உள்துறை அமைச்சகம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த உத்தரவை பிறப்பித்ததைத் தொடர்ந்து, மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் இருந்து சிஆர்பிஎப் வீரர்கள் விமானம் மூலம் டெல்லிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

பாதுகாப்பு அமைப்புகளின் அதிகாரிகள் கூறுகையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் போராட்டங்கள், அரசியல் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் நாடாளுமன்ற கூட்டத்தொடரை முன்னிட்டு டெல்லியில் சட்டம் - ஒழுங்கை வலுப்படுத்த இந்த கூடுதல் படைப்பிரிவுகள் களமிறக்கப்படுகின்றன என்றனர். போராட்டங்களின் போது பல இடங்களில்வன்முறைமோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, உடனடி பாதுகாப்பு பலப்படுத்தல் அவசியமாக இருந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த 20 சிஆர்பிஎப் கம்பெனிகளும், மேற்கு வங்க சட்டசபை தேர்தலுக்காக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தேர்தல் முடிந்த பிறகும் மாநில அரசின் கோரிக்கையின்படி அங்கேயே இருந்த நிலையில், தற்போது டெல்லிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஒரு சிஆர்பிஎப் கம்பெனியில் சுமார் 100 வீரர்கள் இடம்பெறுவர்.

இதற்கு முன்பே, கரப்பான்பூச்சி ஜனதா கட்சி போராட்டங்கள் மற்றும் ஜூலை 20-ஆம் தேதி தொடங்கிய மழைக்கால நாடாளுமன்ற கூட்டத்தொடரை முன்னிட்டு, சுமார் 30 சிஆர்பிஎப் கம்பெனிகளும், அதன் கலவர தடுப்பு சிறப்புப் பிரிவான விரைவு அதிரடிப்படையும்டெல்லி போலீசுக்கு மத்திய அரசு வழங்கியிருந்தது.தற்போது கூடுதலாக 20 கம்பெனிகள் அனுப்பப்படுவதன் மூலம் தலைநகரில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டு உள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# தமிழகத்தில் ஜூலை 28ந் தேதி வரை மிதமான மழை வாய்ப்பு



ஜூலை 28-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. உள் மாவட்டங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை வெப்பநிலை உயரக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளையும் (ஜூலை 23), நாளை மறுதினமும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

25-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் லேசானது முதல் மிதமானமழையும்பெய்யக்கூடும்.

26 முதல் 28-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழையும்,இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 26-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியத்தில் 1500 ஆண்டுகள் மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ முத்தாம்பிகை சமேத ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவிலில் பிரம்மோற்சவம் கடந்த ஜூலை 17ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று கொடி ஏற்றத்துடன் தொடங்கி மிக விமர்சையாக நடைபெற்று வருகிறது, இன்று ஐந்தாம் நாள் உற்சவத்தில் புஷ்ப அலங்காரத்தில் ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

# விருத்தாசலத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான அரசு நலத்திட்ட முகாம்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சிவராமகிருஷ்ணன், நகரமைப்புஅலுவலர்செல்வம், நகரமைப்பு ஆய்வாளர் கோகுலகிருஷ்ணன் மற்றும் நிரந்தர, ஒப்பந்தப் பணியாளர்கள், நகர்ப்பகுதியில் உள்ள பிற தூய்மைப் பணியாளர்கள் பெரும்திரளாகக் கலந்துகொண்டனர்.




தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாம் நேற்று ஜூலை 22 புதன்கிழமை நடைபெற்றது.

இம்முகாமை விருத்தாசலம் நகர மன்றத் தலைவர் மருத்துவர் சங்கவி முருகதாஸ் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி ஆணையர் நாகராஜ், பொறுப்பு சுகாதார அலுவலர்

இம்முகாமில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவு, முதியோர் ஓய்வூதியம், திருமண உதவி, இயற்கை மரணம், விபத்து மற்றும் பணியின்போது உயிரிழப்புக்கான நிவாரணம், மகப்பேறு உதவி, கல்வி உதவித்தொகை மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் குறித்த சேவைகள் வழங்கப்பட்டன. பொது மருத்துவப் பரிசோதனை, தோல் நோய் பரிசோதனை மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகிய சுகாதாரச் சேவைகளும் அளிக்கப்பட்டன.

மேலும், அரசு மானியத்தில் ஆதார் பதிவு மற்றும் திருத்தம், குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் போன்ற முக்கிய அடையாள ஆவணங்கள் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பணியாளர்களின் முன்னேற்றத்திற்காகக் கல்வி உதவித்தொகைகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாற்று வாழ்வாதாரப் பயிற்சிகளும் இம்முகாமில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை தோறும் நடைபெறும்

# பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் குவியும் பொதுமக்கள் கூட்டத்தை குறைக்க வேண்டும்

### மாவட்ட ஆட்சியருக்கு தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக மனு

தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் கோவை சிவாஜி காலனி பகுதியில் அமைந்துள்ளது. இதன் மாநில



துணைத்தலைவராக வழக்கறிஞர் புஷ்பா னந்தம் இருந்து வருகிறார். இவரது தலைமையில் இன்று கோவை மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை மனு ஒன்று வழங்கப்பட்டது.அந்தமனுவில்தமிழகம் முழுவதும், ஒவ்வொரு திங்கட்கிழமையும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்று வருவது வழக்கம். இதன் ஒரு பகுதியாக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக முகாமில், வரிசையில், நின்று பொதுமக்களின், மனுவை, கம்ப்யூட்டரில் பதிவு செய்து, அதன்பின் மாவட்ட ஆட்சியரை நேரடியாக சந்தித்து குறைகளை தெரிவிக்கலாம், மனுக்களையும் நேரடியாக கொடுக்க லாம், மனு கொடுத்தவுடன் மாவட்ட ஆட்சியர் அவருக்கு கீழ் உள்ள உயர் அதிகாரிகளுக்கு, அந்த மனு, குறித்த உத்தரவை வழங்குவார். இதில், துணை ஆட்சியர்கள், துணை ஆணையர்கள், மற்றும் கலெக்டரின் நேர்முக உதவியாளர், குறிப்பாக மாவட்ட துறையின் உயரதிகாரிகள், அனைத்து தாசில்தார்களும் இக்கூட்டத்தில் பங்கேற்பார்கள். மனுக்களை அந்தந்த துறைஅதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, பொதுமக்கள் மனு கொடுத்தவுடன் அவர்களுக்கு அதற்கான ரசீது வழங்கப்பட்டு வருகின்றது. மனு கொடுத்த அன்றே மனுவில் குறிப்பிட்டப்பட்டுள்ள செல் எண்ணிற்கு மனு அளிக்க பட்டுள்ளதாப குறுஞ்செய்தி வருகின்றது. ஆனால் மனு கொடுத்த, சம்பந்தப்பட்ட துறைகளில் இருந்து, எந்த பதிலும் வருவதில்லை. எனது அமைப்பு மற்றும் கட்சியின், சார்பாக பல்வேறு மனுக்களை, ஒவ்வொரு வாரமும் பொதுமக்கள், குறைதீர்க்கும் முகாமில் கொடுத்து வருகிறோம், மனு வழங்கப்பட்டதற்கான குறுஞ்செய்தி வருகின்றது. ஆனால் பதில் கடிதம் முறையாக வருவதில்லை, குறிப்பாக குறைதீர்க்கும் முகாமில், அந்தந்த அரசு துறை உயர் அதிகாரிகள் மனு முகாமிற்கு வருவதில்லை, குறிப்பாக தாசில்தார் அலுவலக மனு என்றால், தாசில்தார் மற்றும் துணை தாசில்தார்கள் வருவதில்லை, பார்மாலிட்டிக்காக தாலுகா அலுவலகத்தில் இருந்து ஒருசாதாரண ஆபீஸ் கிளார்க் குறைதீர்க்கும் நாள் முகாமில் கலந்து கொள்கிறார். இதனால் பொதுமக்களின் கூட்டம், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. குறிப்பாக சாக்கடை வசதி, குடிநீர் வசதி, ஜாதி சான்றிதழ், இருப்பிட சான்று, மின்சார வசதி, அரசு லோன் கேட்டு மனு, இருக்கும் வீட்டுக்கு பட்டாகேட்டு மனு, வேலை கேட்டு மனு, இலவசவீட்டு மனைபட்டாவழங்ககோரி மனு, என பல்வேறு மனுக்கள் மாவட்ட ஆட்சியரிடம் திங்கட்கிழமை நாட்களில் வழங்கப்பட்டு வருகின்றது. அதிகாரிகள் பொதுமக்கள் மனுக்கள் மீது, உடனடி நடவடிக்கை எடுக்காததினால் மட்டுமே மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக மனு அளிக்க பொதுமக்கள் வருகின்றனர். எனவே மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அதிகாரிகளை அவர்களது அலுவலகத்தில் நேரடியாக சந்தித்து சம்பத்தப்பட்ட மனுக்களை பெற்று உடனடியாக அவற்றிற்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்




# தென்காசியில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் வட்டார செயற்குழு கூட்டம்

தென்காசி மாவட்டம் தென்காசியில் தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணியின் வட்டார செயற்குழு கூட்டம். தென்காசி சி .எம் .எஸ் . மெக்ட்விட்டர். நடுநிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ரா. குத்தாலிங்கம் தலைமை வகித்தார்.

வட்டார தலைவர் சே. சேக் முகமது ரபீக் முன்னிலை வகித்தார். வட்டாரச் செயலாளர்ரா ரவி வரவேற்புரையாற்றினார். இந்த செயற்குழு கூட்டத்தில் மாநில செயற்குழுஉறுப்பினர்.க. ராஜ்குமார் மற்றும் மா. மகேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட 1. வரும் ஆகஸ்ட் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் வட்டாரத் தேர்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. 2. ஆணைஎண் 243 இல் ஒரு சில திருத்தங்களை செய்து. தொடக்கப்பள்ளி மற்றும் ஆசிரியருக்கும் நடுநிலை பள்ளிக்கு பதவி உயர்வுக்கு வழிவகை செய்ய வேண்டும். என வட்டாரத்தின் சார்பாக மாநில மையத்திற்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. 3. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் வயது மூப்பில் இருக்கும் ஆசிரியர்களுக்கு இதய நோய், சர்க்கரை நோய், டயாலிசிஸ் போன்ற நோய் உள்ளவர்களுக்கு பணியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என மாவட்ட மையத்தின் மூலம் கோரிக்கை மனுவினை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டது. 4. வரும் 26 .7.2026ல். குற்றாலத்தில் மேலகரம் பேரூராட்சி மண்டபத்தில் நடைபெறும் மாநில செயற்குழு கூட்டத்திற்கு நிதி உதவியும் பொருள் உதவியும் வழங்குவது பற்றி தீர்மானிக்கப்பட்டது. 5. சிறப்பு தகுதி தேர்வுகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் 40% முதல் 60% வரை அனைவருக்கும் ஒரே சராசரி மதிப்பெண் வழங்கவும். அனைவருக்கும் பணி நியமனத்தின் அடிப்படையில் வெயிட்டேஜ் மதிப்பெண் வழங்க வேண்டும். 6. ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வட்டாரசெயற்குழுகூட்டத்தில் எடுக்கப்படும் கோரிக்கைகளை வட்டார கல்வி அலுவலகத்திற்கு தெரிவித்து மனு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தின் நிறைவில் வட்டார பொருளாளர் இ. சங்கர குமாரசாமி நன்றி கூறினார்.

## தென்காசி நகராட்சி சார்பில்

# தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கான அரசு சேவைகள் தொடர்பான நலத்திட்ட முகாம்

தென்காசி நகராட்சி சார்பில் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தி



ற்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாமானது சிவா திருமண மண்டபத்தில் நடைபெற்றது முகாமை நகர்மன்ற தலைவர்சாதிர்தலைமை ஏற்று குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

நிகழ்வில் நகரமன்ற துணைத் தலைவர் KNL சுப்பையா நகராட்சி ஆணையாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகராட்சி சுகாதாரஅலுவலர் பிச்சையா பாஸ்கர் அனைவரையும் வரவேற்றார்,

நிகழ்வில் நகராட்சி பொறியாளர் கண்ணன் உதவி திட்ட கணிணி அலுவலர் ஜெயபாரதி மாவட்ட வழங்கல் அலுவலர் DSO பால்த்துரை மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் மதிவதனா மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் மஞ்சுமிதா மருத்துவ அலுவலர் முகேஷ் கண்ணா சிறப்புவருவாய் ஆய்வாளர் ராஜ்குமார் மாவட்ட தாட்கோமேகலாஜெனிஷிஸ் .ம.ஷியா நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் கணேசன் சரவணன் மாரிமுத்து ரத்தினகுமார் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் முத்துக்குமார் துரைசாமி சுப்பிரமணியன் சுடலை மற்றும் இந்தியன் ஓவர்சீஸ்பேங்க் சோமசுந்தரம் மாவட்ட சமூகநலத்துறை ராஜகுமாரி, சுப்பம்மாள் ஆதார் சேவை ரூபி, சக்திவேல்அரசினர் தொழிற்பயிற்சி பள்ளி துறை சுடலைமணி, முருகேசன் மருத்துவ காப்பீடுதிட்டம் முத்துமாரி

இதில் தாட்கோ, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மருத்துவத்துறைரேஷன் கல்வித்துறை தொழிலாளர் துறை சமூக நலத்துறை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை தாட்கோ உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நகராட்சியைச் சார்ந்த நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மருத்துவமனைகள் மற்றும்பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவரதுகுடும்பத்தார்கள் முகாமில் கலந்து கொண்டனர் .

# மத்திய அமைச்சர் அமித்ஷாவின் புதுச்சேரி வருகை திடீர் ரத்து

புதுச்சேரி: மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் புதுச்சேரி வருகை திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி காவல் துறைக்கு குடியரசுத் தலைவரின்



உயரிய வண்ண விருது அறிவிக்கப்பட்டது. காவல் துறையின் நீண்டகால சிறப்பான சேவை, ஒழுக்கம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பில் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த உயரிய விருது புதுச்சேரி காவல் துறைக்கு வழங்கப்படுகிறது.

இதற்கான விழா புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள காவல் மைதானத்தில் வரும் சனிக்கிழமை (ஜூலை 25) மாலை நடைபெற இருந்தது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கலந்து கொண்டு காவல் துறைக்கு குடியரசுத் தலைவரின் வண்ண விருதை வழங்கி கவுரவிக்க, புதுச்சேரி வருகை தர இருந்தார். இதற்கான ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் புதுச்சேரிவருகைதிடீரெனரத்துசெய்யப்பட்டுள்ளது. இது குறித்து போலீஸ் உயரதிகாரிகள் தரப்பில் கேட்டபோது, "மத்திய உள்துறை அமைச்சரின் புதுச்சேரி வருகை திடீரெ ரத்தாகியுள்ளது. மாற்று தேதி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அவ்வாறு குறிப்பிடப்பட்டால் தெரிவிக்கப்படும்" என்று தெரிவித்தனர்.

# பரந்தூர் விமான நிலைய விவகாரம்: தவெக அரசுக்கு நயினார் நாகேந்திரன் சரமாரி கேள்வி



சென்னை: "தவெக அரசுக்கு பரந்தூரில் விமான நிலையம் அமைவது பிரச்சினையா அல்லது தமிழகத்துக்கு ஒரு புதிய விமான நிலையம் கிடைப்பதில் பிரச்சினையா?" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பதவில், "சமீபத்தில் வெளியான நிதி ஆயோக் திட்டக்குழு அறிக்கையில், தமிழகத்தின் விமான நிலையங்கள், கழிவுநீர் மேலாண்மை உள்ளிட்ட உட்கட்டமைப்புகளில் மாநில அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதை முதல்வர் விஜய் தலைமையிலான அரசு, தங்களது அரசியல் வேறுபாடுகளைக் கடந்து கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தங்களின் அரசியல் ஆதாயத்திற்காக தமிழகத்தின் வளர்ச்சியில் சமரசம் செய்யக் கூடாது.

காரணம், தமிழகத்தில் புதிதாக ஒரு விமான நிலையம் அமைவதற்கு முட்டுக்கட்டை போடும் வகையில், 'விமான ஓடுதளம் அமைக்க பரந்தூர் ஏற்ற இடம் இல்லை' என தவெகவின் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பேசியிருந்தார். ஆனால், பரந்தூர் விமான நிலையத்திற்கு மாற்று இடம் வேண்டி தமிழக அரசு இதுவரை எந்த கோரிக்கையும் மத்திய அரசிடம் வைக்கவில்லை என விமானப் போக்குவரத்து துறை இணை அமைச்சர் முரளிதர் மோஹோல் நாடாளுமன்றத்திலேயே தெளிவுபடுத்திவிட்டார். அப்படியிருக்கையில் அமைச்சர் நிர்மல்குமார் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் பரந்தூரில் விமான நிலையம் அமைக்கக் கூடாது என்று கூறினார்?

பரந்தூரில் விமான நிலையம் அமைக்க முடியாது என்று கூறும் தவெக அரசு, இதுநாள் வரை மாற்று இடத்தை தேர்வு செய்யாதது ஏன்? தவெக அரசுக்கு பரந்தூரில்விமானநிலையம்அமைவதுபிரச்சினையா அல்லது தமிழகத்துக்கு ஒரு புதிய விமான நிலையம் கிடைப்பதில் பிரச்சினையா உட்பட பல கேள்விகள் மக்கள் மனதில் எழுகின்றன.எனவே, நிதி ஆயோக் அறிக்கையின்படி, தமிழகத்தின் விமானப் போக்குவரத்து துறையை மேம்படுத்தும் வகையில், தமிழகத்தில் மேலும் ஒரு புதிய விமான நிலையம் அமைக்க தவெக அரசு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடியில் அதிமுகவிலிருந்து 100க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்தனர்

தூத்துக்குடியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் நகர மன்றத் தலைவர் அ.இ.அதிமுக ர. மனோஜ்குமார் தலைமையில், கு. கென்னடி, பி.சார்லஸ், பி.லியோ உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் 24 மற்றும் 25வது வார்டுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அ.இ.அதிமுக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்தனர்.

இந்த இணைப்பு நிகழ்வு, தமிழக வெற்றிக்கழக பொதுச்செயலாளர் அமைச்சர் புஷி ஆனந்த் தலைமையில், மாநில பொதுச்செயலாளர் அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் தூத்துக்குடி மீன்வள அமைச்சர் ஸ்ரீநாத் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் இணைந்த அனைவரையும் கட்சித் தலைவர்கள் வரவேற்று வாழ்த்துகளைத் தெரிவித்தனர். தமிழக வெற்றிக்கழகத்தின் கொள்கைகள் மற்றும் மக்கள் நலப் பணிகளால் ஈர்க்கப்பட்டு, தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் இருந்து புதிய உறுப்பினர்கள் கட்சியில் இணைந்தனர்.



# கூகுள் ஏ.ஐ. உலக அளவிலான ஆராய்ச்சி போட்டியில் கோவை மாணவர் ரூ.24 லட்சம் முதல் பரிசை வென்று சாதனை

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமார் நேரில் அழைத்து பாராட்டு



அமெரிக்காவில் உள்ள கூகுள் டீப்மைண்ட் - கேகில் உலகளாவிய போட்டியில் முதலிடம் பெற்று 24 லட்சம் பரிசு வென்ற கோவையைச் சேர்ந்த ஏஐ ஆராய்ச்சியாளர் சென்னை ஐ ஐ டி மாணவர் அர்ஜுன் திலக்கை தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சரை சந்திப்பதற்கான நேரம் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

லண்டனை தலைமையிடமாகக் கொண்ட, சென்னையில் இயங்கி வரும் ஈராஸ் இன்னோவேஷன் நிறுவனத்தின் ஏஐ ஆராய்ச்சியாளரும், ஐஐடி சென்னை மாணவருமான அர்ஜுன் திலக் மற்றும் ஈராஸ் இன்னோவேஷன் ஏஐ ஆராய்ச்சியாளர் ராம்குமார் ஆகியோர் உருவாக்கிய கேஜ் என்ற செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு மதிப்பீட்டு கருவி, கூகுள் டீப் மைண்ட் ஏஐ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் காகுள் இணைந்து நடத்திய உலகளாவிய ஏஐ ஆராய்ச்சி ஹேக்கத்தானில், உலகம் முழுவதும் வழங்கப்பட்ட நான்கு கிராண்ட் பிரைஸ் விருதுகளில் ஒன்றைப்பெற்று சாதனை படைத்துள்ளது. இதற்காக அவர்களுக்கு அமெரிக்க டாலர் 25,000 (சுமார் ரூ.24 லட்சம்) பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

ஏஜிஐ-ஐ நோக்கிய முன்னேற்றத்தை அளவிடுதல் : அறிவாற்றல் திறன்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த ஹேக்கத்தானை உலகின் மிகப்பெரிய ஏஐ ஆராய்ச்சி நிறுவனமான கூகுல் டீப் மைண்ட், மற்றும் போட்டித் தளமான காகிள் மூலம் நடத்தியது. இதில் உலகம் முழுவதும் இருந்து 192 நாடுகளைச் சேர்ந்த 7,654 போட்டியாளர்கள் மற்றும் 1,063 அணிகளும் பங்கேற்றன. மொத்தம் 2 லட்சம் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.1.9 கோடி) பரிசுத்தொகைக்காக போட்டியிட்டனர். இதனை 20 நாடுகளைச் சேர்ந்த நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்வு செய்தனர்.

மாணவர் அர்ஜின் திலக்கின் கண்டுபிடிப்பான கேஜ் என்ற இந்த மதிப்பீட்டு முறை, ஒரு ஏஐ மாடலுக்கு "தனக்குத் தெரியாததைத் தெரிந்துகொள்ளும் திறன் உள்ளதா? அதற்கேற்ப மனித உதவியை நாடுகிறதா?" என்பதை சோதிக்கிறது.

270 சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கேள்விகள் மூலம், ஏஐ மாடல்கள் கேள்வியின் கடினத்தன்மையை கணித்து, பதிலளிப்பதில் தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தி, பதிலை அளிக்க வேண்டுமா அல்லது மனித மேற்பார்வைக்கு ஒப்படைக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யும் வகையில் இந்த மதிப்பீடு அமைக்கப்பட்டுள்ளது. இதில் கூகுள் ஜெமினி ஏஐ, ஏந்த்ரோபிக் கிளவுட், அலிபாபா க்யூவென், டீப் சீக் உள்ளிட்ட உலகின் முன்னணி 8 ஏஐ மாடல்கள் மதிப்பிடப்பட்டன.

இந்த ஆய்வின் மூலம், அதிக மதிப்பெண் பெற்ற ஏ ஐ மாடல் அவசியமாக அதிக சுய விழிப்புணர்வுடன் செயல்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. சில ஏஐ மாடல்கள் தாங்கள் தவறக்கூடிய கேள்விகளில் மனித உதவியை நாடிய நிலையில், மிகவும் துல்லியமானதாக இருந்த ஒரு மாடல் தவறாக இருந்தபோதும் ஒருமுறையும் விலகவில்லை. அரசு, கல்வி மற்றும் மருத்துவம் போன்ற முக்கிய துறைகளில் ஏஐ பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், "எனக்கு உறுதியாகத் தெரியவில்லை; மனிதர் சரிபார்க்க வேண்டும்" என்று கூறும் திறன் பாதுகாப்புக்கு மிகவும் அவசியம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் மாணவரின் சாதனைகளைக் கேள்விப்பட்டு கோவை மாவட்ட பொறுப்பாளரும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை அமைச்சருமான வி சம்பத் குமார் மாணவர் அர்ஜுன் திலக்கை நேரில் அழைத்துபாராட்டி கண்டுபிடிப்பு குறித்து கேட்டறிந்தார். அர்ஜுனின் திறமையைப் போற்றி, அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்ததோடு, "இன்னும் பல சாதனைகளைப் படைத்து, நம் மண்ணிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும்" என்று வாழ்த்தி ஊக்கமளித்தார். மேலும், மாண்புமிகு முதலமைச்சரை சந்திப்பதற்கான நேரம் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.



# அங்கன்வாடி மையத்தில் ரூ.2.19 லட்சம் மதிப்பிலான சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந. ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் புதன்கிழமை வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சென்னசமுத்திரம் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் நடைபெற்று முடிக்கப்பட்ட சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஊரக கட்டடம் பழுதுப்பார்த்தல் திட்டத்தின் கீழ் ரூ.2.19 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் தரம், பயன்பாடு மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், குழந்தைகள் பாதுகாப்பாகவும், சுகாதாரமான சூழலில் சேவைகளைப் பெறும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சித் துறை மற்றும் உள்ளாட்சி நிர்வாக அதிகாரிகள் உடனிருந்தனர்.

# நியாய விலைக்கடையில் மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந. ப்ரியா



ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் புதன்கிழமை வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருமலைச்சேரி ஊராட்சியில் செயல்பட்டு வரும் நியாய விலைக்கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தரம், இருப்பு மற்றும் விநியோக நடைமுறைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பொருட்கள் உரிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளனவா, பொதுமக்களுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அப்போது, உணவுப் பொருட்களின் தரத்தை தொடர்ந்து கண்காணித்து, பொதுமக்களுக்கு குறைபாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது வாலாஜா வட்டாட்சியர் திரு. நடராஜன் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

# "15 நாளில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.30 வரை அதிகரித்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது" அன்புமணி பேச்சு



சென்னை: "சந்தையில் அரிசியின் புழக்கத்தை அதிகரித்து விலையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழகத்தில் கடந்த 15 நாள்களுக்கு முன் அரிசி விலை கிலோவுக்கு ரூ.15 வரை உயர்ந்திருந்த நிலையில், இப்போது மீண்டும் கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.15 வரை உயர்த்தப்பட்டுள்ளது. வெறும் 15 நாள் இடைவெளியில் சாப்பாட்டு அரிசியின் விலை கிலோவுக்கு ரூ.30 வரை உயர்ந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இரு நாள்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.52-க்கு விற்பனை செய்யப்பட்ட சாதாரண ரக பொன்னி அரிசி விலை இப்போது ரூ.8 விலை உயர்ந்து ரூ.60 ஆகியுள்ளது. மைசூர் பொன்னி, ஆந்திரா பொன்னி ஆகிய அரிசி வகைகளின் விலை 50 ரூபாயிலிருந்து ரூ.65 ஆக உயர்ந்துள்ளது.

சன்னரக அரிசி விலை ரூ.64-லிருந்து ரூ.75 ஆக உயர்ந்திருக்கிறது. இட்லி அரிசி விலை கிலோ ரூ.43-லிருந்து ரூ.50 ஆக அதிகரித்துள்ளது. 26 கிலோ எடை கொண்ட அரிசி மூட்டை விலை ரூ.250 முதல் ரூ.400 வரை உயர்ந்திருக்கிறது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பருவமழை பெய்யாததால் காவிரி பாசன மாவட்டங்களில் கோடை மற்றும் குறுவை பருவ சாகுபடி குறைந்தது தான் இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால், கடந்த ஆண்டில் குறுவை, சம்பா, தாளடி ஆகிய 3 பருவங்களிலும் நெல் அமோகமாக விளைந்ததாலும், நடப்பாண்டில் குறுவை பருவம் இன்னும் முடிவடையாததாலும் இந்த காரணத்தை ஏற்க முடியவில்லை.

அடுத்த சில மாதங்களில் அரிசி வரத்து குறையும் என்பதை எதிர்பார்த்து வணிகர்கள் செயற்கையாக விலையை உயர்த்தியிருப்பதாகவே விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது. காரணம் என்னவாக இருந்தாலும் அரிசி விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்படக் கூடாது.

அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த இந்தியாவிலிருந்து அரிசி ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும்; மொத்த வணிகர்களின் அரிசி கையிருப்புக்கு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளின் மூலம் சந்தையில் அரிசியின் புழக்கத்தை அதிகரித்து விலையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், மாநில அரசும் அதன் பங்குக்கு விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அரிசி ஆலைகள், மொத்த வணிகர்கள் ஆகியோரிடம் உள்ள அரிசியில் 20 விழுக்காட்டை அடக்க விலைக்கு அரசே கொள்முதல் செய்து நியாயவிலைக்கடைகள், கூட்டுறவு விற்பனை அங்காடிகள் ஆகியவற்றின் மூலம் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முன்வர வேண்டும்" என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

# டெல்லி போராட்டத்துக்கு ஆதரவாக தமிழகத்தில் போராடுவோர் மீதான நடவடிக்கை சரியா? அமைச்சர் ராஜ்மோகன் விளக்கம்



சென்னை: "நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என்றால், கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால், இந்தப் பிரச்சினை தீராது என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "மாணவர்களின் அறவழிப் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேசமயம் எதிர்க்கட்சி தலைவர்களின் கைது நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அன்றும் சரி, இன்றும் சரி... நீட் ஒழிப்பே நிரந்தர தீர்வு என வலியுறுத்துகிறோம். நாங்கள் நீட் சீரமைப்பு பற்றி சொல்லவில்லை. நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என்றால், கல்வியை மாநிலப் பட்டியலுக்குகொண்டு வரவேண்டும். கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வராமல் இந்தப் பிரச்சினை தீராது. அரசுப் பள்ளிகளை மூடுவதில் எங்களுக்கு உடன்பாடு கிடையாது. மாறாக, மாணவர்களை சேர்ப்பதற்கான முயற்சிகள் தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது" என்றார்.

பின்னர், 'இங்கு நேற்று இரவு சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தியவர்களை வலுக்கட்டாயமாக போலீஸார் கைது செய்துள்ளனர். டெல்லி காவல் துறைக்கும், தமிழக காவல் துறைக்கும் வித்தியாசமே இல்லையா?' என்ற கேள்விகள் எழுப்பப்படுகிறது என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "சாலை என்பது போராடுவதற்கான இடம் இல்லை. இரவு நேரம் என்பது முக்கியமான நேரம். வேலை முடித்து வீட்டுக்கு செல்லக்கூடிய அவசரம் இருக்கும். மற்றபடி போராடுவதற்கு எல்லாம் உரிமையும் இருக்கிறது. போராட்டம் என்பது முறையாக, ஜனநாயக முறையில் இருக்க வேண்டும்.

டெல்லியில் களத்தில் நின்று போராடிய எதிர்க்கட்சி தலைவரை பலவந்தமாக கைது செய்துள்ளனர். அவர் சாலையில் எல்லாம் போராடவில்லை. அவர்களுக்கும், நமக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அதை புரிந்துகொள்வதில் தான் உங்களுக்கு பாராபட்சம் இருக்கிறது" என்றார்.

பின்னர், மத்திய அரசை கண்டிப்பதில் அரசு சார்பில் தாமதம் ஏற்படுகிறதே என்ற கேள்விக்கு, சில மணி நேர தாமதத்தை, தாமதம் என சொல்ல முடியாது. நீட் தேர்வை ரத்து செய்யும் ரகசியம் எங்களுக்கு தெரியும் என்று நாங்கள் சொல்லவில்லை.

கல்வியை மாநிலப் பட்டியலுக்குகொண்டு வரவேண்டும் என தெளிவாக சொல்லிவிட்டோம். இது திட்டமிட்ட தாமதம் இல்லை; தரவுகளை திரட்டி, சரியான முறையில் சொல்வதில் தாமதம் ஏற்படுகிறது. சட்டப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வோம்" என்ற் அவர் கூறினார்.

# சென்னையில் அமலாக்கத்துறை சோதனை நிறைவு முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக தகவல்

திருவொற்றியூர், தேனாம்பேட்டை ஆகிய இடங்களில் நேற்று காலை முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் நடத்தி வந்த சோதனை நிறைவடைந்தது. அதில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




சென்னையில் உள்ள தேனாம்பேட்டை, திருவொற்றியூர் ஆகிய 2 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று (ஜூலை 21) காலை முதல் சிஆர்பிஎப் போலீசார் உதவியுடன் அதிரடி சோதனை நடத்தினர்.

குறிப்பாக, சென்னை தேனாம்பேட்டை பகுதியில் வசித்து வரும் தரணிதரன் என்பவர் வீட்டிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் காலை முதல் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இவர் போக்குவரத்துத் துறையில் துணை ஆணையராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தரணிதரன் தனது பணிக்காலத்தில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், வழக்குப் பதிவு செய்த அமலாக்கத்துறை விசாரித்து வந்தது. அதன் தொடர்ச்சியாக, நேற்று காலை முதல் அவரது வீட்டில் சோதனை நடைபெற்றதாக கூறப்படுகிறது.

மேலும், அவரது மனைவியின் ஆடிட்டர் அலுவலகத்திலும் நேற்று காலை முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

அதேபோல, சென்னை திருவெற்றியூர் பகுதியில் வசந்தம் என்ற பெயரில் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வரும் முருகேசன் என்பவரது வீட்டிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

ஆக மொத்தம் சென்னையில் 3 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்து வந்தனர். சட்டவிரோத பணம் பரிமாற்றம் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதாவது, ஏற்கனவே சட்ட விரோத பணப்பரிமாற்றம் நடைபெற்றதாக ஆடிட்டர் ஒருவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் அமலாக்கத்துறை தரப்பில் தகவல் வெளியாகி உள்ளது.

குறிப்பாக அந்த ஆடிட்டருடன் தரணிதரனின் மனைவியும் ஆடிட்டராக பணிபுரிந்து வரும் நிலையில், அது சம்பந்தமாக இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்நிலையில், நேற்று காலை முதல் இன்று அதிகாலை வரை நடைபெற்ற சோதனை நிறைவடைந்த சூழலில், பல்வேறு முக்கிய ஆவணங்களும், டிஜிட்டல் ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்த பின்னரே, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தெரியவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அமலாக்கத் துறை எந்த வழக்கு என்பது குறித்து தெளிவான விளக்கங்களை இன்னும் வெளியிடவில்லை. கைப்பற்றப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்த பிறகே, இதுகுறித்த தகவல்களை முழுமையாக அமலாக்கத்துறை அதிகாரிகள் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஈரோடு மாநகராட்சி சார்பில் மூலப்பாளையம் பகுதியில் உள்ள தனியார் மஹாலில், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமை தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி தொடங்கி வைத்தார். இம்முகாமில் பல்வேறு அரசுத் துறைகளின் சேவைகள் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கபட்டது.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, அட்டவணை அனுமன்பள்ளி கிராமம், கொங்கு மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.07.2026) பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, அட்டவணை அனுமன்பள்ளி கிராமம், கொங்கு மஹாலில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.07.2026) கேட்டறிந்தார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் து.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, அட்டவணை அனுமன்பள்ளி கிராமம், கொங்கு மஹாலில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் கர்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.07.2026) வழங்கினார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் து.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலுக்கா அலுவலக வளாகத்தில் வந்து செல்லும் பொதுமக்களுக்கு கழிப்பிடம் அமைத்து தருமாறு கோரிக்கை.





உளுந்தூர்பேட்டை தாலுக்கா அலுவலக வளாகத்தில் 15-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் ஒரே இடத்தில் இயங்கி வருகின்றன. தாலுக்கா அலுவலகம் காவல் நிலையம் ஆதார் அட்டை திருத்துமையும் சார் பதிவாளர் அலுவலகம் தேர்தல் பிரிவு சர்வேயர் அலுவலகம் . கிளை சிறைச்சாலை வட்டார வழங்கள் அலுவலகம் இன்னும் பிற துறைகள் இருப்பின்இதன் காரணமாகதினந்தோறும் 2000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள்,வழக்கறிஞர்கள், விவசாயிகள், பெண்கள் இங்கு வந்து செல்கின்றனர்.

ஆனால் இங்கு போதுமான *பொதுக் கழிப்பிட வசதி இல்லை*. இதனால் வயதானவர்கள், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர் எனவே மக்கள் நலன் கருதி உடனடியாக *தாலுக்கா வளாகத்தில் கூடுதல் கழிப்பிடம் குடிநீர் வசதி* அமைத்து தருமாறு புரட்சி பாரத கட்சியின் கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K.K. ஏழுமலை மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை வைத்துள்ளார்

# J&K cop Aashiq Hussain Qureshi killed in first terror attack since Pahalgam killings; CCTV emerges



A policeman was killed after terrorists opened fire in Jammu and Kashmir's Anantnag town on Wednesday. The attack took place at around 12.30 pm at Lal Chowk in Anantnag.

This is the first terror attack in Jammu and Kashmir since April 22, 2025, when 26 civilians were killed in the Pahalgam terror attack.

According to officials, Head Constable Aashiq Hussain Qureshi (Belt No. 20), of the IR 3rd Battalion and a resident of Beerwah in Budgam district, was deployed on Amarnath Yatra security duty when he came under attack.

He was rushed to the Government Medical College Hospital in Anantnag, where the attending doctors declared him dead. Further medico-legal proceedings are being carried out as per protocol.

This is the first terror attack in Jammu and Kashmir since April 22, 2025, when 26 civilians were killed in the Pahalgam terror attack.

According to officials, Head Constable Aashiq Hussain Qureshi (Belt No. 20), of the IR 3rd Battalion and a resident of Beerwah in Budgam district, was deployed on Amarnath Yatra security duty when he came under attack.

He was rushed to the Government Medical College Hospital in Anantnag, where the attending doctors declared him dead. Further medico-legal proceedings are being carried out as per protocol.

Security forces have cordoned off the area and launched a search operation to track down the assailants.

Reacting to the attack, Jammu and Kashmir Chief Minister Omar Abdullah said he was "deeply saddened" by the death of Head Constable Ashiq Hussain of the IRP 3rd Battalion, J&K Police, who was killed in the line of duty.

"HC Hussain made the ultimate sacrifice in a cowardly terror attack in the Anantnag area of south Kashmir. I unequivocally condemn this attack and send my heartfelt condolences to the members of his family. May Allah grant him the highest place in Jannat," Abdullah said.

Jammu and Kashmir Lieutenant Governor Manoj Sinha also condemned the attack, saying he had spoken to Director General of Police Nalin Prabhat to review the situation.

"My heartfelt condolences to the family of Head Constable Ashiq Hussain Qureshi, who sacrificed his life in the line of duty. The whole country stands shoulder-to-shoulder with the family of the martyr. I strongly condemn this cowardly attack. This heinous act will not go unpunished. J&K Police and our security forces are on the ground and will bring those responsible to justice," the Lieutenant Governor said.

Reacting to the attack, CPI(M) Central Committee member and Kulgam MLA M Y Tarigami condemned the killing, calling it a "heinous attack" that had "snuffed out a precious life."

"Such acts of violence are deeply reprehensible and must be condemned unequivocally. I express my deepest sympathies with the family, friends and colleagues of the slain policeman in this hour of grief," Tarigami said in a post on X.

# பழநி கோயில் நில மோசடி விவகாரம்: சிபிஐ விசாரிக்கக்கோரி அதிமுக ஜூலை 25ல் ஆர்ப்பாட்டம்

பழநி: பழநி கோயில் நிலமோசடி வழக்கை சிபிஐ விசாரணைக்கு உத்தர விட வலியுறுத்தி ஜூலை 25-ல் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக அதிமுக முன்னாள் எம்எல்ஏ பரமசிவம் அறிவித்துள்ளார். திண்டுக்கல் மாவட்டம் பழநியில் இன்று செய்தியாளர்களை சந்தித்த திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், வேடசந்தூர்தொகுதி முன்னாள் எம்எல்ஏவுமான வி.பி.பி. பரமசிவம் கூறும்போது, "பழநி கோயிலில் ரூ.100 கோடி மதிப்பிலான நில மோசடி நடந்திருப்பது என்பது ஆண்டவனுக்காக அறம் செய்ய வருகிற ஆன்மிகபெரியோர்களை அச்சத்தில் ஆழ்த்துகிற விதமாக இருக்கிறது.



இதற்கு விஜய் தலைமையிலான தவெக அரசு முழுமையாக பொறுப்பேற்க வேண்டும். இந்த முறைகேட்டில் அரசு இயந்திரம் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் எழுகிறது.

எனவே, பொதுவான அமைப்பான சிபிஐ இந்த வழக்கை விசாரிக்க வேண்டும். கோயில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள், சொத்துகளின் விவரங்களை வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும். அப்போது தான் ஆன்மிகப் பணி, மக்களின் நலனுக்காகபயன்படுத்தப்படுகிறதா அல்லது தனி நபர்களின் லாபத்துக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறதாஎனதெரியவரும். இந்த நில முறைகேட்டைகண்டித்து அதிமுக சார்பில் ஜூலை 25-ம் தேதி பழநியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

மிகப்பெரிய உயர்மட்டஅழுத்தம்இல்லாமல் சட்டவிரோதமாக பத்திரப் பதிவு நடந்திருக்க வாய்ப்பில்லை. இந்த விவகாரத்தில் ஒரு மிகப் பெரியசக்திபடைத்த, பணம்படைத்தயாரோ ஒருவர் இதற்கு பின்னால் இருக்கிறார். இந்த முறைகேடு காரணமாக இனி கோயில்களுக்கு கொடை வழங்க வேண்டும் என்ற எண்ணம் இனி யாருக்காவது வருமா என கேள்வி எழுகிறது.

சம்பந்தப்பட்ட பதிவுத் துறை மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்கள் பேச்சில் முரண்பாடு வெளிப்படுகிறது. அனுபவமில்லாத புதியவர்களுக்கு ஆட்சி செய்யும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவர்கள் கவனத்துடன், கண்ணியத்தோடு நடந்துகொள்ள வேண்டும். ஒரு நிர்வாகத்தை ஏமாற்றி பெரிய முறைகேடு நடந்துள்ளது. தமிழகம் முழுவதும் இருக்கிற கோயில் நிலங்களை யார் பாதுகாப்பது? அரசு நிர்வாகத்தை நிர்பந்தித்த நபரை அரசு இயந்திரமான சிபிசிஜடி வைத்து எப்படி கண்டுபிடிக்க முடியும்?

அதனால் பொது அமைப்பான சிபிஐ விசாரிக்க வேண்டும். எய்தவன் எங்கேயோ இருக்கிறான். அம்பு சிக்கியிருக்கிறது. வில் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். இந்த முறைகேட்டை தனிநபர் குற்றமாக கருத முடியாது. சிபிசிஜடி விசாரணை என்பது திருடன் கையிலேயே சாவியை கொடுத்தது போல் இருக்கிறது" என்று முன்னாள் எம்எல்ஏ பரமசிவம் கூறினார்.

பின்னர், ஆர்ப்பாட்டம் தொடர்பாக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி பரமசிவன், தொடர்ந்து பழநி அடிவாரத்தில் உள்ள சர்ச்சைக்குள்ளான இடத்தை நேரில் பார்வையிட்டார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.